**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.188/2018**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw5/Pw4 |
| Name | : பாஸ்கர் |
| Father/Husband's Name | : எல்லப்பன் |
| Village | :திருக்கச்சூர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 52 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.09.2026.

**முதல் விசாரணை:**

நான் பிளம்பராக வேலை செய்து வருகிறேன். 2017 வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை மல்ரோசபுரம் அருகே இருக்கும் இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க் அருகே பிளம்பிங் வேலை முடித்து சென்று கொண்டிருக்கும் போது எனது மச்சான் சக்கரவர்த்தி எனக்கு போன் செய்து பாபு என்பவருக்கு கார் மூலமாக விபத்து ஏற்பட்ட விவரத்தை என்னிடம் சொன்னார். நான் உடனே திருத்தேரி கூடுட்டுறவு வங்கிக்கு எதிரே சென்று பார்த்த போது பாபுவை ஆம்புலன்சில் ஏற்றி சென்றுவிட்டார்கள். அங்கு போலீசார் படம் வரைந்தார்கள். அதற்கு நானும் பூபதியும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அதசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த தேதி மற்றும் மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ தேதியின்று எத்தனை மணிக்குள் எனக்கு போன் வந்தது என்றால் 7.00–7.30 மணிக்குள் போன் வந்தது. தகவல் கிடைத்த பிறகு சம்பவ இடத்திற்கு கால் மணி நேரத்தில் சென்றேன். 7.45 மணியளவில் சென்றிருப்பேன். நான் சம்பவ இடத்தில் எதுவும் பார்க்கவில்லை. ஆம்புலன்ஸ் போன விவரத்தை என்னிடம் சொன்னார்கள். நான் கையெழுத்தை எங்கு வைத்து போட்டேன் என்றால் மருத்துவமனையில் வைத்து போட்டேன். அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், இறந்தவர் எனது நண்பர் என்பதால் அவருக்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

சம்பவம் கூட்டுறவு வங்கி எதிரே நடந்தது. அங்கு போலீசார் படம் வரைந்தார்கள். நான் மருத்துவமனையில் வைத்து கையெழுத்து போட்டேன்.

**மறுவிசாரணை இல்லை**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.188/2018**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw6/Pw5 |
| Name | : பூபதி |
| Father/Husband's Name | : வேதாசலம் |
| Village | :திருக்கச்சூர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.09.2026.

**முதல் விசாரணை:**

நான் பிளம்பராக வேலை செய்து வருகிறேன். 2017 வருடம் தேதி மாதம் ஞாபகம் இல்லை. நான் சிங்க பெருமாள் கோயில் பேருந்து நிலையத்தில் பஸ்சில் இருந்து இறங்கிய போது அங்கிருந்த ஒரு நபர் எனது ஊர் காரர் பாபுவிற்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். அதனால் நான் அமுல் பாக்கிரி அருகே கூட்டுறவு வங்கிக்கு எதிரே சென்று பார்த்த போது பாபுவை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பிவிட்டார்கள். மறைமலைநகர் போலீசார் அங்கு விசாரணை செய்தார்கள். என்னிடம் சாட்சியாக இருக்கும் படி கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் அதசா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திற்கு 8.00 மணிக்கு மேல் சென்றேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது ஆம்புலன்ஸ் சென்று விட்டது. நான் அதன்பிறகு எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். மருத்துவமனைக்கு செல்லவில்லை. பாஸ்கரும் நானும் ஒன்றாக சம்பவ இடத்திற்கு சென்றோமா என்றால் இல்லை. தனித்தனியாக சென்றோம். அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும், இறந்தவர் எனது ஊர் காரர் என்பதாலும், அவருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu